# TNPSC GROUP I MAIN EXAM – 2023

## WALKIN TEST III TAMIL ELIGIBILITY TEST AND APTITUDE & MENTAL ABILITY

**Total Marks: 100** **Time: 1 hr 30 mts**

## TAMIL ELIGIBILITY TEST

1. **கீழ்க்காணும் பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்புக் தேவையில்லை.**

நடுநாடு என்னும் பெயர் ஏற்பட்டதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. அவையாவன.

1. தொண்டை நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் நடுவே இருப்பதால் நடுநாடு எனப்பட்டது. அஃதாவது தென் பெண்ணையாற்றுக்கு வடக்கேயிருப்பது தொண்டை நாடு, வடவெள்ளாற்றிற்குத் தெற்கேயிருப்பது சோழ நாடு; இந்த இரண்டிற்கும் நடுவே இருப்பது நடுநாடு.
2. மலையமான் தான் புரிந்த உதவிகளுக்காக சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் தனக்கு அளித்த நிலப்பகுதிகளை இணைத்து, மூவர் நாடுகட்கும் எல்லை உடையதாக மூவர் நாடுகட்கும் நடுவே அமைத்துக் கொண்ட நிலப்பகுதியாதலின் நடுநாடு எனப்பட்டது.
3. முடியுடை மூவேந்தர்க்கும் பொதுவுடைமை உள்ளதாக நடுநிலைமையில் இருந்ததால் நடுநாடு எனப்பட்டது.
4. மலையமான் மரபினர் மூவேந்தரிடத்தும் நட்பு உடையவராக, மூவேந்தரும் உதவி வேண்டியபோதெல்லாம் புரிந்தவராக, மூவேந்தர்க்கும் நடுநிலை உடையவராக இருந்தமையால் அவர்கள் ஆண்ட நாடு நடுநாடு எனப்பட்டது.

மேற்கூறிய பெயர்க் காரணங்கள் நான்கினையும் தொகுத்து இரண்டாகச் சுருக்கிவிடலாம். அவையாவன:

1. மிகப்பெரிய தொண்டை நாட்டிற்கும் மிகப் பெரிய சோழ நாட்டிற்கும் நடுவே உள்ள ஒரு சிறு நாடு ஆதலின் நடுநாடு எனப்பட்டது. இந்தக் காரணம் பொருத்தமாகத்தான் தெரிகிறது.

2. முடிவுடைப் பேரரசர் மூவர்க்கும் நண்பராய் நடுநிலைமை உடையவராய் வாழ்ந்த மலையமான் மரபினர் ஆண்டதால் நடுநாடு எனப்பட்டது. இந்தக் காரணமும் பொருத்தமாகத்தான் இருக்கிறது. இதன்படி பார்த்தால், இன்று உலகின் நடுநிலை நாடாகச் சுவிட்சர்லாந்து என்னும் சிறுநாடு விளங்குவது போல, அன்று தமிழகத்தின் நடுநிலை நாடாக இது விளங்கியிருந்தமை புலப்படும். இந்தக் கருத்துக்கு புலவர் கபிலர் மலையமான் திருமுடிக்காரியின் மேல் பாடியுள்ள

வீயாத் திருவின் விறல்கெழு தானை
மூவருள் ஒருவன் துப்பா கியரென
ஏத்தினர் தருஉம் கூழே நுங்குடி

என்னும் புறநானூற்றுப் பாடல் பகுதி தக்க சான்று.

2. **பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து, அதன் இறுதியில் உள்ள வினாக்களுக்கு சுருக்கமாகவும், தெளிவாகவும் சரியான விடை எழுதுக.**

**திராவிட மொழிக்குடும்பம்**

திராவிட மொழிக்குடும்பம், மொழிகள் பரவிய நில அடிப்படையில் தென்திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வடதிராவிட மொழிகள் என மூன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. திராவிட மொழிக்குடும்பத்திலுள்ள தமிழ், கன்னடம், மலையாளம் முதலானவை தென் திராவிட மொழிகள் எனவும் தெலுங்கு முதலான சில மொழிகள் நடுத்திராவிட மொழிகள் எனவும் பிராகுயி முதலானவை வடதிராவிட மொழிகள் எனவும் பகுக்கப்பட்டுள்ளன.

பட்டியலில் உள்ள 24 மொழிகள் தவிர அண்மையில் கண்டறியப்பட்ட எருகலா, தங்கா, குரும்பா, சோழிகா ஆகிய நான்கு மொழிகளையும் சேர்த்துத் திராவிட மொழிகள் மொத்தம் 28 எனக் கூறுவர். சொற்களின் இன்றியமையாப் பகுதி சேர்ச்சொல், அடிச்சொல் எனப்படும். திராவிட மொழிகளின் சொற்களை ஆராய்ந்தால், அவை பொதுவான அடிச்சொற்களைக் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது.

சான்று : மூன்று – தமிழ், மூணு – மலையாளம், மூடு – தெலுங்கு, மூரு – கன்னடம், மூஜி – துளு, திராவிட மொழிகளில் உயிர் எழுத்துகளில் உள்ள குறில், நெடில் வேறுபாடுகள் பொருளை வேறுபடுத்தத் துணை செய்கின்றன. சான்று : அடி – குறில், ஆடி – நெடில்.

திராவிட மொழிகளில் பொருள்களின் தன்மையை ஒட்டிப் பால்பாகுபாடு அமைந்துள்ளது. ஆனால், வடமொழியில் இவ்வாறு அமையவில்லை. உயிரற்ற பொருள்களும் கண்ணுக்கே புலப்படாத நுண்பொருள்களும் கூட, ஆண், பெண் என்று பாகுபடுத்தப்படுகின்றன. இம்மொழியில் கைவிரல்கள் பெண்பால் என்றும் கால்விரல்கள் ஆண்பால் என்றும் வேறுபடுத்தப்படுகின்றன. ஜெர்மன் மொழியிலும் இத்தகைய தன்மையைக் காணமுடிகிறது. முகத்தின் பகுதிகளான வாய், மூக்கு, கண் ஆகியவை வேறுவேறு பால்களாகச் சுட்டப்படுகின்றன. வாய் - ஆண்பால், மூக்கு – பெண்பால், கண் - பொதுப்பால் எனப் பகுக்கும் நிலை உள்ளது.

திராவிட மொழிகளில் ஆண்பால், பெண்பால் என்ற பகுப்பு உயர்திணை ஒருமையில் காணப்படுகிறது. அ்றிணைப் பொருள்களையும் ஆண், பெண் என்று பால் அடிப்படையில் பகுத்தாலும் அவற்றிற்கெனப் பால்காட்டும் விகுதிகள் இல்லை. தனிச்சொற்களாலேயே ஆண், பெண் என்ற பகுப்பை உணர்த்தினர். (எ.கா. கடுவன் - மந்தி; களிறு – பிடி)

ஆங்கிலம் போன்ற மொழிகளில் வினைச்சொல் காலத்தை மட்டும் காட்டுமே தவிர திணை, பால், எண், இடம் ஆகிய வேறுபாட்டைக் காட்டுவதில்லை. திராவிட மொழிகளின் வினைச்சொற்கள் இவற்றைத் தெளிவாகக் காட்டுகின்றன. எடுத்துக்காட்டு: வந்தான் - உயர்திணை ஆண்பால் படர்க்கை ஒருமை.

இவ்வியல்புக்கு மாறாக மலையாள மொழி மட்டுமே அமைந்துள்ளது. அம்மொழியில் திணை, பால், எண் ஆகியவற்றைக் காட்டும் பால் காட்டும் விகுதிகள் இல்லை. தனிச் சொற்களாலேயே ஆண், பெண் பகுப்பை அறிந்துகொள்ள முடியும். இவ்வாறு திராவிடமொழிகள் சில பொதுப்பண்புகளைப் பெற்றிருந்தாலும் அவற்றுள் தமிழுக்கென்று சில சிறப்புக் கூறுகளும் தனித்தன்மைகளும் உள்ளன.

திராவிட மொழிக்குடும்பத்தின் தொன்மையான மூத்த மொழியாகத் திகழ்கின்ற தமிழ், பிற திராவிட மொழிகளைவிட ஒப்பியல் ஆய்வுக்குப் பெருந்துணையாக அமைந்துள்ளது. தமிழ் மொழி மூலத்திராவிட மொழியின் பண்புகள் பலவற்றையும் பேணிப் பாதுகாத்து வருகிறது. அத்துடன் தனித்தன்மை மாறுபடாமல் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் பண்பு கொண்டதாகவும் தமிழ்மொழி விளங்கி வருகிறது.

**வினாக்கள்**

1. ஆண்பால் பெண்பால் பற்றிய திராவிட மொழிகளின் அணுகுமுறை யாது?
2. திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை?
3. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம் பெற்றுள்ளது?
4. காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக் கொள்கிறது?
5. திராவிட மொழிகளின் சொற்களை ஆராய்வதன் மூலம் அறியப்படுவது யாது?

3. அரசு முதன்மை செயலாளர் அவர்கள் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உதவித் திட்டத்தின் கீழ் அரசு பள்ளிகளில் பயிலும் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு உயர் கல்வி உதவித்திட்டம் தொடர்பாக அரசு ஆணை பிறப்பிக்கப்படும் வகையில் அறிக்கை ஒன்றை எழுதிடுக.

**4. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்து 300 சொற்களில் கட்டுரை வரைக.**

1. திருக்குறளில் மனிதநேயம் குறித்து ஒரு கட்டுரை வரைக.
2. திருக்குறளில் அறக்கருத்துக்கள் எவ்வாறு கூறப்பட்டுள்ளது என்பது குறித்து ஒரு கட்டுரை வரைக.
3. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட திருக்குறள் தற்காலத்திற்கும் எவ்வாறு பொருந்துவதாக அமைந்துள்ளது என்பது குறித்து ஒரு கட்டுரை வரைக.
4. திருக்குறள் ஓர் உலக பொதுமறை என போற்றப்படுவது ஏன்?
5. தமிழ் இலக்கியத்தில் திருக்குறள் பெறும் இடம் யாது?

# APTITUDE AND MENTAL ABLITY

## SECTION A

**2 x 10 = 20**

**Answer the following in 150 words each**

1. Draw a histogram and frequency polygon to represent the following data.
பின்வரும் விவரங்களை கொண்டு நிகழ்வு செவ்வகம் மற்றும் நிகழ்வுப் பலகோணம் வரைக

| **Marks** மதிப்பெண் | 10 – 20 | 20 – 30 | 30 – 40 | 40 – 50 | 50 – 60 | 60 – 70 | 70 – 80 | 80 – 90 | 90 – 100 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **Number of students** மாணவர்களின் எண்ணிக்கை | 12 | 22 | 35 | 40 | 60 | 52 | 40 | 30 | 5 |

2. Answer the following questions
பின்வரும் வினாக்களுக்க விடையளி

a. The area of a rhombus is equal to the area of a triangle whose base and the corresponding altitude are 24.8 cm and 16.5 cm respectively. If one of the diagonals of the rhombus is 22 cm, find the length of the other diagonal. (5m)
ஒரு சாய்சதுரத்தின் பரப்பளவு முக்கோணத்தின் பரப்பளவுக்கு சமம், முக்கோணத்தின் அடிப்பகுதி மற்றும் உயரம் முறையே 24.8 செ.மீ மற்றும் 16.5 செ.மீ சாய்சதுரத்தின் மூலைவிட்டங்களில் ஒன்று 22 செ.மீ ஆக இருந்தால், மற்றொரு மூலைவிட்டத்தின் நீளத்தைக் கண்டறியவும்.

b. A sum of Rs. 1290 is divided between A,B and C such that A 's share is $1\frac{1}{2}$ times that of B and B's share is $1\frac{3}{4}$ times that of C . Find the share of each? (5m)
ரூ.1290 ஆனது A, B மற்றும் C க்கு பகிர்ந்து அளிக்கப்படுகிறது. A என்பவர் இதில் B பெறும் தொகையில் $1\frac{1}{2}$ மடங்கு பெறுகிறார். B என்பவர் இதில் C பெறும் தொகையில் $1\frac{3}{4}$ மடங்கு பெறுகிறார் எனில் அவர்களின் பங்கீட்டுத் தொகைகளை காண்க.

## SECTION B

**2 x 15 = 30**

**Answer the following in 250 words each**

3. Prices of a particular commodity in two villages are given below
இரண்டு கிராமங்களில் ஒரு குறிப்பிட்ட பொருளின் விலை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **Village A** | 40 | 80 | 70 | 48 | 52 | 72 | 68 | 56 | 64 | 60 |
| **Village B** | 52 | 75 | 55 | 60 | 63 | 69 | 72 | 51 | 57 | 66 |

Which village has more consistent price?
எந்த கிராமத்தில் நிலையான விலை உள்ளது?

 Appolo, Chennai, Ph: 24339436, 42867555, 9840226187

4. Answer the following questions
பின்வரும் வினாக்களுக்கு விடையளி

a. Present the following information is a suitable tabular form (7.5 m)
பின்வரும் தகவல்களுக்கு பொருத்தமான அட்டவணையை தயார் செய்

In 1980, out of a total of 1750 workers of a factory 1200 were members of a trade union. The member of women employed was 200, of which 175 did not belong to a trade union.

In 1990, there were 1800 employees who belonged to a trade union and 50 who did not belong to a trade union of all the employees in 1990, 300 were women, of whom only 8 did not belong to a trade union.

1980இல் தொழிற்சாலையில் இருந்த மொத்தம் 1750 தொழிலாளர்களில் 1200 பேர் ஒரு தொழிற்சங்கத்தில் உறுப்பினர்களாக இருந்தனர். இத்தொழிற்சாலையில் பணிபுரியும் 200 பெண் உறுப்பினர்களில் 175 பெண்கள் எந்த தொழிற்சங்கத்தையும் சேராதவர்கள்.

1990இல், ஒரு தொழிற்சாலையில் 1800 ஊழியர்களும் தொழிற்சங்கத்தை சேர்ந்தவர்கள். மேலும் 1990இல் அனைத்து ஊழியர்களில் 50 பேர் மட்டும் தொழிற்சங்கத்தில் சேராதவர்கள். மேலும் இத்தொழிற்சாலையில் பணிபுரியும் 300 பெண்களில் 8 பேர் மட்டும் தொழிற்சங்கத்தை சேராதவர்கள்.

b. A path 5 m wide runs along the inside of the rectangular field. The length of the rectangular field is three times the breadth of the field. If the area of the path is 500 $m^2$ then find the length and breadth of the field. (7.5 m)
ஒரு செவ்வக வயல்வெளியின் உட்புறமாக, 5 மீ அகலமான நடைபாதை உள்ளது. வயல்வெளியின் நீளம், அதன் அகலத்தைப்போல் மூன்று மடங்காகும். நடைபாதையின் பரப்பளவு 500 மீ$^2$ எனில், வயல்வெளியின் நீள, அகலங்களைக் காண்க


Appolo, Chennai, Ph: 24339436, 42867555, 9840226187